<u>2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S.No.321/2023</u>

27.10.2025 பி.வா.சா. 1 திருமதி. குட்டித்துரை

(1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.
<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது தகப்பனார் வேலாயுத தேவருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் பூர்ணத்தம்மாள் 2 வது மனைவி பெயர் பொன்னாத்தாள் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும் பூர்ணத்தம்மாளுக்கும் பிறந்தவர்கள் சுப்பிரமணியன் மற்றும் பார்வதி என்றால் சரிதான். பார்வதி இறந்துவிட்டார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார். சுப்பிரமணியின் மனைவி தான் வேம்பு. வேம்புக்கும் சுப்பிரமணியனுக்கும் பிறந்தவர்கள் தான் இந்த வழக்கின் வாதியும் பொன்பாண்டி என்றால் சரிதான். வேலாயுத தேவருக்கு பொன்னாத்தாள் மூலம் பிறந்தவர்கள் தான் நான் உட்பட மற்ற பிரதிவாதிகள் அனைவரும் என்றால் சரிதான். வாதி பிராது 2 வது தபசிலாக சொத்தாக விவரிக்கப்பட்டுள்ள பாதைக்கு மேற்கே உள்ள பிராது 1 ம் தபசில் சொத்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1 ம் தபசில் சொத்தில் தான் வாதி 2006 ல் கிரையம் பெற்று 2008 ல் வீடு கட்டி குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான்.

2. 2008 ம் ஆண்டிலேயே 1 ம் தபசில் சொத்திற்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல அதற்கு பின்பு தான் மின் இணைப்பு கிடைத்தது. அவர்கள் வீடு கட்டி 4, 5 வருடங்களுக்கு பின்பு தான் மின் இணைப்பு கிடைத்தது. நான் இந்த வழக்கிற்காக 4, 5 வருடங்கள் கழித்து மின் இணைப்பு கிடைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிழக்கு எல்கையாக பிராது 2 ம் தபசில் சொல்லப்பட்டுள்ளது என்றால் எங்கள் பத்திரத்தில் வழி பாதை இல்லை. வாதி தாக்கல் செய்த வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் நான் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன். எதிர்வழக்குரை பக்கம் 7 லில் பாரா 12 ல் வாதி வீட்டிற்கு பிராது 2 ம் தபசில் பாதை வழியாகத்தான் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்ற கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. அந்த மின் கம்பத்தின் வழியாகத்தான் பொன்பாண்டியன் வீட்டிற்கும் மின் இணைப்பு செல்கிறது என்றால் சரியல்ல பார்வதிக்கு வீட்டிற்கும் குட்டிதுரை வீட்டிற்கும் என் வீட்டிற்கு மட்டுமே செல்கிறது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 4 2 வது புகைப்படத்தில் காட்டப்படும் வீடு வாதியின் வீடு என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ன் 2 வது புகைப்படத்தில் காட்டப்படும் கம்பத்திலிருந்து மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் நாங்கள் எங்கள் இடத்தில் நிறுவிய மின் கம்பம்

மனுதாவிமனத்துடன் மின் இணைப்பு கொடுத்துள்ளோம். பிராது 2ம் தபசில் பாதையிலிருந்து கிழக்கு பக்கமாக தென்வடல் தெருவிலிருந்து தான் மின் இணைப்பு செல்கிறது என்றால் பாதை இல்லை எங்கள் சொத்திலிருந்து செல்கிறது. 1வது புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது பாதை என்றால் சரியல்ல அது காலியிடம். பிராது 2வது தபசில் சொத்து தற்போது பாதையாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல அது எங்கள் சொத்து.

4. அந்த பாதையில் வாதியும் இன்று வரை நடந்து சென்று வருகிறார் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாக பிரிவினையில் பிரச்சனையின் காரணமாகத்தான் வாதிக்கு பாதை இல்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல பாப்பாவிற்கு 2 வழி பாதை உள்ளது. 2 வழி பாதை உள்ளது என்பதை காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்தால் 2வது தபசில் வழி பாதை தெரிந்துவிடும் என்பதால் தான் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் அறையில் இருப்பவர் 2ம் பிரதிவாதியான எனது தம்பி. 2 வழி என்று காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அவர்கள் வழி என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. வாதி வீட்டிற்கு 2ம் தபசில் வழியாகத்தான் குடிநீர் குழாய் செல்கிறது என்றால் எங்கள் சொத்து வழியாக கொடுத்துள்ளோம்.

5. வாதி பிராது 2ம் தபசில் சொத்து வழியாகத்தான் குடி நீர் குழாய் மற்றும் மின் இணைப்பு 2008ம் ஆண்டு முதல் பயன்படுத்தி வருகிறார் என்றால் நாங்கள் மனுதாபிமானத்தின் அடிப்படையில் கொடுத்துள்ளோம். பிராது 2ம் தபசில் சொத்து ஸ்தலத்தில் பாதையாக தான் தற்போது வதை இருந்து வருகிறது என்றும் எனது தனிப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல. பிராது 2ம் தபசில் சொத்தில் கிழமேல் பாதையில் 2 மின் கம்பங்கள் உள்ளது என்றால் சரிதான். பிராது 2ம் தபசில் சொத்து வழியாகத்தான் பொன்பாண்டியின் வீட்டிற்கும் குடிநீர் செல்கிறது என்றால் அது பொன்பாண்டி வீடு அல்ல எனது வீடு. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் தபசில் பாதையில் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு 13.04.2023ல் வாதியை தாக்கி கம்பி வேலி அமைத்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, அவர்கள் தான் பிரச்சனை செய்தார்கள்.

6. 14.04.2023 அன்று வாதி சுத்தமல்லி காவல் நிலையத்தில் கொடுத்தார் என்றால் சரிதான். புகார் மனு சம்பந்தமாக சுத்தமல்லி காவல் ஆய்வாளர் எங்களை விசாரித்தார். 04.08.2023ல் வாதி பாதையில் நடந்து சென்றபோது பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்பு தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வாதி பாதையில் நடக்ககூடாது என்று கூறி பாதையை அடைக்க முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. அதன் பின் பாதையை அடைக்ககூடாது என்று வாதிக்கு ஆதரவாக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டு வாதி பாதையில் நடந்து செல்வது தடை செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்க பட்டது

என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கு ஏற்கனவே குடும்ப சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருவதால் பிராது 2ம் தபசில் சொத்தை பயன்படுத்தகூடாது என்று பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

7. வாதியும் பொன்பாண்டியும் திருநெல்வேலி சார்பு நீதிமன்றத்தில் எனக்கும் எனது சகோதரர்களான பிரதிவாதிகளுக்கும் எதிராக அ.வ.,எண். 422/ 2023 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பொய் வழக்கு. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராக நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது பாதையில் நடக்கவிடாமல் இடையூறு செய்ததால் வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் என்னுடைய ஆடு அவர்கள் இடத்தில் சென்றதால் குற்ற வழக்கு பதிவு செய்தார்கள். நான் பாதையில் இடையூறு செய்ததால் தான் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வழக்கிற்காக ஆடு சென்றது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிராது 2ம் தபசில் சொத்தான பாதை வாதி அனுபவம் செய்து வருவதற்கு நான் இடைஞ்சல் செய்ததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் சொத்தை பிராது 2ம் தபசில் பாதை வழியாகத்தான் இந்த வாதி 2008 ஆண்டு முதல் பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. 2008ம் ஆண்டிலேயே 2ம் தபசில் பாதை வழியாக மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு ஆகியவை சென்று புழங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 2ம் தபசில் பாதையை ஒப்புக்கொண்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

upload on
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.10.27 19:22:29 +0530

II Additional District Munsif.

Tirunelveli